மலர் : 11 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 7

தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रेड विल्लेज मिनस्ट्री

ഹണ്ഡ്റഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

**மே 2011**

| ஆண்டுசந்தா | இந்தியா ரூ.25 | வெளிநாடு ரூ. 250 |
|---|---|---|

# 100- கிராம ஊழியம்

**TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை**




**TVGM - 2011 மே**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

## கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்.

சங்கீதம் 121 : 7

கர்த்தருடைய கிருபையினால் **வேலூர்** மாவட்டம் – **கலவை மோட்டூர்** கிராமத்தில் **பாஸ்டர் மோகன்** விசுவாசத்தில் கட்டிக் கொண்டிருக்கும் **ஜெபவீடு** சீக்கிரத்தில் கட்டி முடிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட ஜெபியுங்கள்.



**P.T. கிறிஸ்டோபர் & ஸ்டீபன் பார்வையிட்டு ஜெபித்தார்கள்.**

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்



**ஸ்டீபன் கிறிஸ்டோபர்**
மேனேஜிங் டிரஸ்டி



P.T. **கிறிஸ்டோபர்**
TVGM ஸ்தாபகர்

*கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே!*

*நம்முடைய பிதாவாகிய தேவனாலும் , கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக!*

*கர்த்தருடைய கிருபையினாலும், உங்களுடைய ஜெபத்தினாலும் நம்முடைய* **நாகர்கோவில் அறிமுகப்பணி அலுவலகத்திற்கு ஒரு ஆம்னி வேன்** வாங்கிக் கொடுக்க கர்த்தர் கிருபை செய்தார்.

அநேக வருடங்களுக்கு பின்பு 2011ம் ஆண்டு சிங்கப்பூர் தேசத்தில் ***பாஸ்டர் டேனியல்ராஜ், சகோதரி ஷீலா*** தலைமையில் **Elim Revival Gospel Team** ஆரம்பிக்கவும், ***சகோதரி எட்வினா யோபு ( Christian Care Centre )*** அவர்களைக் கொண்டு பிரதிஷ்டை செய்யவும், **Elim Revival Church 20** விசுவாசிகள் **லிட்டில் இந்தியாவை** சுற்றி ஏழு முறை துதித்துப் பாடி வரவும் கர்த்தர் கிருபை செய்தார். இந்த அற்பமான ஆரம்பம் அற்புதமாக வளர ஜெபியுங்கள்.

*கர்த்தருடைய கிருபையினால் TVGM தலைமைத்துவப் பொறுப்புகள் மாற்றம் பெற்று 2011 மே 1 உடன் 7 ஆண்டுகள் முடிவடைகிறது. இதனுடைய ஸ்தோத்திரக் கூட்டம் மே 6 வெள்ளி மாலை 5 to 8 மணி வரை நடைபெறுகிறது. குடும்பமாக வாருங்கள்.*

**நாம் ஒருமித்து தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துவோம்.**

***கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!***

**கிறிஸ்துவின் பணியில்,**

**12.04.2011** ***சகோ. ஸ்டீபன் & சகோ. P.T. கிறிஸ்டோபர்***

# கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார். சங். 121 : 7

கர்த்தருடைய வாக்குத்தத்தத்திற்காக ஆவலோடு காத்திருக்கும் அன்பு சகோதர, சகோதரிகளே!

இந்த மாதம் கர்த்தர் உங்களுக்கு கொடுக்கும் **வாக்குத்தத்தம் :**

**சங்கீதம் 121 : 7**

**கர்த்தர் உன்னை எல்லாத்**

**தீங்குக்கும் விலக்கிக் காப்பார்.**

ஆம்! கர்த்தர் உங்களை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார். நம்முடைய தேவன் அதிசயமானவர். அவர் நம்மை எல்லாத் தீங்கிற்கும் விலக்கி பாதுகாக்க ஆயத்தமாயிருக்கிறார். **"எங்களைச் சோதனைக்குட் படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்..."** என மத்.6:13–ல் வாசிக்கலாம். இந்த ஜெபத்தை நாம் தினமும் ஏறெடுக்கும் போது, நமக்கு எல்லாத் தீங்குகளிலிருந்தும் தெய்வீக பாதுகாப்பு கிடைக்கும்.

தீங்குக்கு பயப்படவேண்டாம் என்று தேவன் நமக்கு அநேக வசனங்களை வேதாகமத்திலே கொடுத்திருக்கிறார். அநேக நேரங்களில் நாம் பில்லிசூன்ய கட்டுகள், செய்வினைகள் போன்ற சாத்தானின் செயல்களை கண்டு பயந்து விடுகிறோம்.

ஆனால் **ஏசாயா 54 : 17** – ல் இப்படியாக வாசிக்கலாம். **"உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்; உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய்; இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்தரமும், என்னாலுண்டான அவர்களுடைய நீதியுமாயிருக்கிறதென்று கர்த்தர் சொல்லுகிறார்"**. ஆகவே நாம் பயப்படாமல் சாத்தானின் திட்டங்களை நாம் தைரியமாக எதிர்கொள்ள வேண்டும்.

மேலும், தேவன் நமக்கு தீங்கை மேற்கொள்ளும் அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார். தேவன் நமக்கு கொடுத்த இந்த அதிகாரம் மிகவும் வல்லமையுள்ளது என்பதை **லூக்கா10:19–ல்** வாசிக்கலாம். "**இதோ, சர்ப்பங்களையும், தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்த மாட்டாது.**" ஆனால் பல சமயங்களில் தேவன் நமக்கு சர்ப்பங்களையும், தேள்களையும் மிதிக்கக் கொடுத்த அதிகாரத்தை மறந்து போகிறோம்.

இந்த உலகத்திலே சாத்தானை கட்டுகிறதற்கு தேவன் நமக்கு திறவு கோலைக் கொடுத்திருக்கிறார். ஆனால் பல நேரங்களில், அந்த திறவு கோலை வைத்துக்கொண்டே நாம் சாத்தானை கட்டுவதற்கு மற்ற வழிகளை நாடுகிறோம். மத். 16 : 19–ல் "**பரலோகராஜ்யத்தின் திறவுகோல் களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும் , பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப் பட்டிருக்கும் என்றார்.**" என வாசிக்கலாம். நம்முடைய தேவன் நம்மை நேசிக்கிறார். ஆகவே இந்த உலகத்திலே சாத்தானுடைய செயல் களைக் கட்டுவதற்கு தேவன் நம்மை பயன்படுத்த விரும்புகிறார். எனவே பயப்படாதிருங்கள்!

நம்மை எல்லாச் சோதனை களுக்கும், தீங்கிற்கும் விலக்கி காப்பது தான் தேவனுடைய முதலாவது நோக்கமாகும். ஆனால் அநேக தருணங்களில் தேவன் நம்மை நேசிக்கிறார் என்ற நம்பிக்கையை இழந்து நாம் முறுமுறுக்கிறோம். தேவன் நம்மோடே இருந்து, நம்மை எல்லா தீமைகளுக்கும் விலக்கி பாதுகாக்க அவர் ஆயத்தமாயிருக்கிறார் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். யாக்.1:13ல் "**சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிற வரல்ல, ஒருவனையும் அவர் சோதிக் கிறவருமல்ல**" என வாசிக்கலாம். தேவன் நிச்சயமாகவே உங்கள் வாழ்வில் எதிர்கொள்ளும் தீமைகளி லிருந்து உங்களுக்கு விடுதலைக் கொடுப்பார்.

பிசாசின் அதிகாரத்தை அழிக்கும்படியாக தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனாகிய இயேசுவை நமக்கு தந்தார். இதை எபி. 2 : 14–ல் வாசிக்கலாம். "**ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களா யிருக்க, அவரும் அவர்களைப் போல மாம்சத்தையும், இரத்தத் தையும் உடையவரானார்; மரணத் துக்கு அதிகாரியாகிய பிசாசான வனைத் தமது மரணத்தினாலே அழிக்கும் படிக்கும் . . .** " ஆகவே தைரியமாக தேவனுடைய விடுதலை யாக்கும் வல்லமையிலே நம்பிக்கை யாயிருங்கள்.

நம் வாழ்க்கையில் காணப்படும் தீமையான காரியங்களை அழிப்பதற்கு நாம் சில காரியங்களை செய்ய வேண்டும்.

*1. தீமைகளிலிருந்து பாதுகாக்கப்பட ஜெபியுங்கள்.*

*2. உங்களை தேவனுக்கு ஒப்புக் கொடுங்கள்.*

*3. பாவத்திலிருந்து விலகி பரிசுத்தமாகுங்கள்.*

*4. தேவனுடைய வார்த்தையையும், அதிகாரத்தையும் கொண்டு பலப்படுங்கள்.*

*5. உறுதியாக நிலைத்திருந்து சாத்தானை எதிர்த்து போராடுங்கள்.*

*6. தேவன் உங்களோடிருக்கிறார் என்பதை நிச்சயித்து கொள்ளுங்கள்*

**முதலாவது,** நாம் தீமைகளிலிருந்து பாதுகாக்கப்பட ஜெபிக்க வேண்டும். மற்றவர்களும் பாதுகாக்கப்பட ஜெபிக்க வேண்டும். இதை யோவான் 17:15,16ல் வாசிக்கலாம். "**நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக் கொள் ளும்படி நான் வேண்டிக் கொள் ளாமல், நீர் அவர்களைத் தீமையி னின்று காக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன். நான் உலகத்தா னல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல.**" நாம் எவ்வளவு அதிகமாய் ஜெபிக்கிறோமோ அவ்வளவு அதிகமாய் உலகத்திலிருந்து பிரித் தெடுக்கப்பட்டு, தீமையிலிருந்து காக்கப்படுவோம்.

**இரண்டாவதாக,** நாம் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, அவர் சித்தத்தின்படி செய்ய வேண்டும். நாம் தினமும் தேவனோடு நெருக்கமாக நடக்க கற்றுக் கொள்ள வேண்டும். இதை **யாக்.4:7,8** – ல் வாசிக்கலாம். "**ஆகையால், தேவனுக்குக் கீழ்ப் படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான். தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்.**" தேவன் உங்களிடத்தில் எவ்வளவு நெருக்கமாக உள்ளாரோ அவ்வளவு அதிகமாய் பிசாசு உங்களை விட்டு ஓடிப் போவான்.

**மூன்றாவதாக,** தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் பாவத்திலிருந்து விலகியிருக்க வேண்டும். இதை **1யோவான் 5 : 18** – ல் வாசிக்கலாம். "**தேவனால் பிறந்த எவனும் பாவஞ் செய்யானென்று அறிந்திருக் கிறோம். தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல் லாங்கன் அவனைத் தொடான்.** " நாம் இப்படிப்பட்ட பரிசுத்தத்தை கடை பிடிக்கும்போது தான், பிசாசு நம்மை விட்டு ஓடிப்போவான்.

**நான்காவதாக**, தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற அதிகாரத்தைக் கொண்டு நாம் பலப்பட வேண்டும். சங்.91:13–ல் "**சிங்கத்தின்மேலும் விரியன் பாம்பின்மேலும் நீ நடந்து, பாலசிங்கத்தையும் வலுசர்ப்பத் தையும் மிதித்துப் போடுவாய்**" என்று வாசிக்கிறோம். நாம் எவ்வளவு அதிகமாய் தேவன் கொடுத்த அதிகாரத்தில் நம்பிக்கையாக இருக்கி றோமோ அவ்வளவு அதிகமாய் நம் வாழ்க்கையில் பிசாசானவனை துரத்த முடியும்.

**ஐந்தாவதாக,** நாம் உறுதியாக நின்று பிசாசை எதிர்க்க வேண்டும். நம்முடைய போராட்டம் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, அந்தகார வல்லமைகளோடும் என்பதை எபேசியர்6: 10 – 13 வரை காணலாம். "**கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத் தின் வல்லமையிலும் பலப்ப டுங்கள். நீங்கள் பிசாசின் தந்திரங் களோடு எதிர்த்து நிற்கத் திராணி யுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத் தையும் தரித்துக் கொள்ளுங்கள். ஏனெனில், மாம் சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும் அதிகாரங்**

**களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. ஆகையால், தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்.**" நாம் பிசாசானவனை எப்படி மேற்கொள்வது என்ற நல்ல புரிந்துகொள்ளுதல் இருந்தால் நமக்கு வெற்றி நிச்சயம். ஆகவே நாம் பிசாசு பயன்படுத்தும் திட்டங்களை புரிந்துக் கொண்டு, அவனுடைய வல்லமைக்கு எதிர்த்து நிற்க வேண்டும்.

**கடைசியாக,** தேவன் நம்மோடிருக்கிறார் என்ற நிச்சயம் நமக்கு இருக்க வேண்டும். நம் திராணிக்கு மேலாக நம்மை சோதிக்க மாட்டார் என்பதை 1 கொரி. 10:13–ல் காணலாம். "**மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங் கொடாமல், சோதனையைத் தாங்கத் தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.**"

ஆகவே உறுதியாக நின்று உங்கள் முழு பெலத்தோடு போராட்டத்தை போராடுங்கள். அப்பொழுது வெற்றி நம்முடையதாகும். தேவனுக்கே ஸ்தோத்திரம்.

**பக்தன் பாடுகிறார் :**

*என் நம்பிக்கை கிறிஸ்துவில் மட்டும்*
*அவர் என் வெளிச்சமும், என் பெலனும், என் கீதமுமானவர்*
*கடுமையான பஞ்சத்திலும், புயலிலும்*
*என் மூலைக்கல்,*
*என் அஸ்திபாரம் அவரே*
*நரகத்தின் வல்லமையும்,*
*மனுஷனின் திட்டங்களும்*
*அவர் கைகளிலிருந்து என்னை பறிக்க முடியாது*
*அவர் வரும்பரை அவர்*
*என்னை அழைக்கும்வரை*
*கிறிஸ்துவின் வல்லமையிலே*
*நான் நிற்பேன்.*

உங்கள் விசுவாசத்தை பின்வருமாறு அறிக்கை செய்யுங்கள்.

**என் தேவன் என்னோடிருக்கிறார்.**
**நான் எந்த தீங்குக்கும்**
**பயப்பட மாட்டேன்.**

ஆம்! நம் தேவன் உங்களோடிருக்கிறார். நீங்கள் உங்கள் விசுவாசத்தை அறிக்கையிடுகையில், தேவன் உங்களுக்கு விசேஷித்த பெலத்தை தந்து, உங்களை எல்லாத் தீங்கிற்கும் விலக்கிக் காப்பார்.

**தேவனுக்கே மகிமை !**

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ.** 4 : 5

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் **'வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்'** இலவசமாக வழங்கி **இயேசுவை**அறிவித்தல்.

## திருச்சி மாவட்டம் - முசிறி யூனியன்

# 100 - கிராம ஊழியம்

**__நோக்கம்:__** 2011 **மே 2** திங்கள் காலை **9** மணி முதல் **மே 6** வெள்ளி இரவு **10** மணி முடிய **முசிறி யூனியன் கிராமப் பகுதிகளில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம்** :2011 **மே 2** திங்கள் காலை **9 - 1** மணி

**கடைசி நாள் ஜெபம் :** 2011 **மே 6** வெள்ளி இரவு **7 - 10** மணி

**( 2011 மே 2 - 6 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**உபவாச ஜெபம் நடைபெறும் இடம்**

**சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்,** TVGM
C/o. **ரிவைவல் அசெம்பிளி சர்ச்**
**77, மாணிக்க நகர், காலேஜ் ரோடு,**
**முசிறி - 621 211.**
**திருச்சி மாவட்டம்.**
**செல்: 99658 72765 , 97873 10301.**

உதவி செய்ய முன் வந்த Pastor **டேவிட்** J. **பிரகாஷ்** அவர்களுக்கு நன்றி!

**__தகுதி__** : ஆலயமில்லாத கிராமங்களில் **5** நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

***__பிரயாணப்படி__* :** தமிழ்நாட்டிலிருந்து ரூ. **5** செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

***__முக்கிய அறிவிப்பு__* :** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

***__சகல தொடர்புகளுக்கும்__* :** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்,
**100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 , 94449 80445**

## TVGM (25 + 7 = 32) ஆண்டு நிறைவு
## ஸ்தோத்திரக் கூட்டம்

இடம் : TVGM தலைமை அலுவலகம்
100 – கிராமம் , சோமரசம்பேட்டை , திருச்சி.
நாள் : 2011 மே 6 வெள்ளி மாலை 5 – 8 மணி
சாட்சிகள் : *100 - கிராம ஊழியர்கள்* , *சிறுவர் இல்லம்.*

**தேவசெய்தி**

**பாஸ்டர் விக்கி விக்கினராஜா** & குழுவினர்
Elim Christian Centre – நியூசிலாந்து

**அன்புடன் அழைக்கிறோம் ! குடும்பமாக வாருங்கள் !**

## திருப்பூர் மாவட்டம் - அவினாசி யூனியன்
## 100 - கிராம ஊழிய அறிக்கை

ஊழியம் நடைபெற்ற தேதி : 14 . 03. 2011 – 18.03.2011

*முதல்நாள், கடைசிநாள், கூடுமிடம், உணவு, இனிப்பு, பார்சல் செலவுகளை பொறுப்பெடுத்து உதவி செய்தவர்* : **பாஸ்டர் Y. ஜீவதுரை, ஏ.ஜி. சர்ச் , பூண்டி.**

*முதல் நாள் தேவசெய்தி கொடுத்தவர்* : **பாஸ்டர் Y. ஜீவதுரை**

| | |
|---|---|
| *ஊழியம் செய்த கிராம ஊழியர்கள்* | : 43 **பேர்** |
| *பிரிக்கப்பட்ட மொத்த குழுக்கள்* | : 10 **குழுக்கள்** |
| *வழங்கப்பட்ட சுவிசேஷப் புத்தகங்கள்* | : 9840 யோவான் சுவிசேஷங்கள் |
| *இயேசுவே இரட்சகர் கைப்பிரதிகள்* | : 10,000 |
| *மற்ற கைப்பிரதிகள்* | : 5,000 |
| *சிலுவைக்கொடிகள்* | : 10,000 |
| *புறமதநண்பர்களின் விலாசங்கள்* | : 183 |






# கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**குழு 1 : சகோதரிகள் :- லூயிஸ், அபியேல் அந்தோணியம்மாள், தெபோராள், மார்கிரெட்.**

**சேகம்பாளையம்** கிராமத்தில் சுவிஷேப் புத்தகம் கொடுத்து வீடுவீடாக சத்தியத்தை சொன்னபோது ராணி என்பவர் தன் மகள் 6 வயதிலிருந்தே பேச முடியாமலிருக்கிறாள். கை கால்களும் நடக்க முடியவில்லை என்று ஜெபிக்கும்படி கேட்டார்கள். நாங்கள் பாரத்தோடு ஜெபித்த போது அந்த சகோதரி தன் தலையை உயர்த்தி, நிமிர்ந்து பார்த்தாள். தன் கையை நீட்ட முடியாத அந்த பெண் கை நீட்டி நாங்கள் கொடுத்த யோவான் புத்தகத்தை வாங்கினாள். தேவனுக்கே மகிமை. **குங்குமபாளையம்** கிராமத்தில் **வாசுகி** என்ற பெண்ணிடம் சுவிசேஷம் சொன்னபோது அதை அவள் ஏற்றுக் கொண்டு, ஞாயிறுதோறும் சபைக்குப் போவோம் என்று சொன்னார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 2:சகோதரர்கள் :- இஸ்ரவேல், செல்வராயர்பால், நோவா,மகாராஜன்**

நாங்கள் 10 கிராமங்களில் ஊழியம் செய்தோம். யாவரும் சுவிசேஷப் புத்தகங்களை வாங்கினார்கள். நாங்கள் சென்ற கிராமங்களில் பெரும்பாலும் 90% மக்கள் இயேசுவை அறியாதவர்கள். ஒரு சில கிறிஸ்தவர்கள் சத்தியத்தைக் கேட்டார்கள். எங்களுக்கு எந்தவித எதிர்ப்புகள் இல்லை. மொத்தம் 1200 சுவிசேஷப் புத்தகங்கள் ,1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 3:சகோதரிகள் :- மரியம்மாள், கிரேஸ்பத்மா,ஜோதிமணி, தேவபாக்கியம்.**

நாங்கள் சென்ற கிராமங்களில் மக்கள் எங்களை அன்புடன் வரவேற்றார்கள். வீடுகள்தோறும் யோவான் புத்தகம் கொடுத்தபோது, யாவரும் சந்தோஷமாக வாங்கினார்கள். அநேகருக்காக ஜெபித்தோம். மொத்தம் 980 சுவிசேஷப் புத்தகங்கள் ,1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 4:சகோதரர்கள் :- பிரேம் ஆனந்த், ஆசீர்பாண்டி, ஆபிரகாம், சூசைமாணிக்கம்.**

**குளத்துப்பாளையம்** கிராமத்தில் ஊழியம் செய்தபோது ஒரு வாலிப மகளுக்கு நாங்கள் ஒரு சுவிசேஷப் புத்தகத்தைக் கொடுத்து இயேசுவைப் பற்றி கூறிக் கொண்டிருந்தபோது, அவளது தாய் ஓடி வந்து, இதுமாதிரி நாங்கள் கொடுத்தால் நீங்கள் வாங்குவீர்களா ? எங்கள் சாமியை பேய், பிசாசு என்றெல்லாம் சொல்கிறீர்களே போங்கள் இங்கிருந்து என்று சத்தமாக கத்தி பேசினார். **பெரியாயி பாளையம்** கிராமத்தில் ஒருவன் எங்களைப் பார்த்து என்னடா கொடுக்கிறீங்க ? மதப் பிரச்சாரமா செய்கிறீர்கள். இதோ வருகிறேன் என்றார். நாங்கள் ஊழியத்தை முடித்துவிட்டு, அடுத்த கிராமத்திற்குப் போனோம். மொத்தம் 1400 சுவிசேஷப் புத்தகங்கள் ,1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 5:சகோதரர்கள் :- யோசுவா, ஸ்டீபன்ராஜ், செல்வராஜ், ஜெபராஜ்.**

**சாமுண்டிபுரம்** பகுதியில் ஊழியம் செய்தபோது, ஒரு வாலிபன் எங்களைப் பார்த்து என்ன கொடுக்கி றீர்கள் என்றார். இயேசுவைப்பற்றி சொல்ல வந்தோம் என்றோம். அதற்கு அவன் உங்களை அடித்து உதைத்து விரட்டுவதற்கு ஆட்களை அனுப்புகிறேன்

என்று எங்களை மிரட்டினார். பின்பு அந்த பகுதியிலுள்ள பாஸ்டரையும் அழைத்து அவரையும் மிரட்டினார். போலீஸ்க்கும் போன் செய்து அவர்கள் வந்து எங்களை சமாதானம் செய்து அந்த இடத்தை விட்டு போகும்படி கூறினார்கள். பின்பு நாங்கள் நிம்மதியாக மற்ற இடங்களில் தேவ ஊழியத்தை நிறைவேற்றினோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 6:சகோதரிகள் :- எஸ்தர், பிச்சையம்மாள், சலோமி சம்மனசு, கிருபா பழனியம்மாள், எஸ்தர்எபிநேசர்**

**சந்தப் பாளையம்** என்ற கிராமத்தில் ஒருவன் எங்களிடம் வந்து வாங்க , வாங்க என்றார். நாங்கள் அவர் பக்கத்தில் சென்றதும் உங்களுக்கு வேறு வேலையில்லையா ? இதை வைத்து சம்பாத்தியம் செய்கிறீர்களா ? இங்கேயே இருங்கள். இதோ இப்போதே நான் பத்து ஆட்களை கூட்டிக் கொண்டு வருகிறேன் என்று வேகமாக சென்றான். நாங்கள் அப்படியே அங்கிருந்து கடந்து போனோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள் ,1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 7:சகோதரிகள் :- எஸ்தர் கனகாம்புஜம், அந்தோணிமேரி, அமிர்தம், ஷீலா, கஸ்தூரி சுப்பையா.**

**புதுப்பாளையம்** ஊராட்சியிலுள்ள எவ்வித தடையும் இல்லாமல் உற்சாகமாக சத்தியத்தை அறிவித்தோம். **சாமந்திக் கோட்டை** கிராமத்தில் ஊழியத்தை முடித்து, **வெங்கமேடு** கிராமத்திற்கு வந்தபோது ஒருவர் பைக்கில் வந்து எங்களிடம் எங்கு போகிறீர்கள் ? யார் உங்களை அனுப்பியது ? உங்கள் இயேசு எங்களுக்கு வேண்டாம். வந்த வழியே திரும்பி போங்கள், இல்லாவிட்டால் உங்கள் கால்களை உடைத்து புத்தகங்களை கிழித்து எரிந்துவிடுவேன். வெளி நாட்டு பணத்தை வாங்கிக் கொண்டு இப்படி ஊர் ஊராக அலைகிறீர்களே. எங்கள் தெய்வம் எங்களைக் காப்பாற்றும் என்று சொல்லி எங்களை விரட்டி விட்டார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள் ,1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 8:சகோதரிகள் :- ரூத், ரெபேக்கா, மணியம்மாள், அன்னாள், தேவகிருபை.**

**சாலைப் பாளையத்தில்** சிலர் எங்களை சுற்றி வளைத்து ஒரு வீட்டிற்குள் அடைத்து வைத்து வீணான வார்த்தை களைச் சொல்லி தூஷித்தார்கள். பிறகு போலீஸ் ஸ்டேஷனுக்கு கூட்டிக் கொண்டு போய் 1 மணி நேரம் விசாரித்துவிட்டு பேப்பரில் கையெழுத்து வாங்கிக் கொண்டு, எங்களை இந்தப் பகுதியிலேயே இருக்கக் கூடாது என்று சொல்லி போலீஸ் காவலுடன் பஸ்ஸில் ஏற்றி திருப்பூருக்கு அனுப்பிவிட்டார்கள். நாங்கள் மீண்டும் அவினாசிக்கு இரவு நேரத்தில் வந்து தங்கிவிட்டு மறுநாள் பக்கத்தில் உள்ள **முத்துச்செட்டிப்பாளையம்** கிராமத்தில் ஊழியம் செய்தோம். அநேகருக்காக ஜெபித்தோம். அப்போது சில வாலிபர்கள் எங்களை ஏன் வந்திருக்கிறீர்கள் ? என்று கேட்டு நாங்கள் வைத்திருந்த சுவிசேஷப் புத்தகங்களைப் பிடுங்கிக் கொண்டு எங்களை மிரட்டினார்கள். திரும்பவும் ஒரு போலீஸ்காரர் வந்து எங்களை திட்டி அன்றைக்கே உங்களை எச்சரித்து அனுப்பினோம். மீண்டும் புத்தகங்களைக் கொடுத்து எங்கள் உயிரை எடுக்கி றீர்களே என்று எச்சரித்து அனுப்பினார். மொத்தம் 1110 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 9:சகோதரிகள் :- வசந்தா, கிளமெண்ட்ஸ்மேரி, லூர்துமேரி, செல்லக்கனி.**

**லட்சுமிநகர்** பகுதியில் யோவான் சுவிசேஷம் கொடுத்தபோது, சிலர் வாங்கினார்கள். சிலர் வேண்டாம் என்றார்கள். ஒருவர் எங்களை யாரிடம் கேட்டு இங்கு வந்தீர்கள், இதையெல்லாம் இங்கு கொடுக்கக்கூடாது என்று சொல்லி வேறு சிலரை அழைத்து வந்து எங்களை தகாத வார்த்தைகளால் திட்டி சுவிசேஷப் புத்தகங்களை பிடுங்கி கீழே கொட்டி எங்களை செல்போனில் போட்டோ எடுத்தார்கள். பின்பு போலீஸ் ஸ்டேஷனுக்கு கூட்டிக் கொண்டு போய் விசாரித்து அவர்களும் திட்டி இனி இங்கே வராதீர்கள் என்று விரட்டினார்கள். எங்களை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்து வந்தவர்கள் சுவிசேஷப் புத்தகங்களை எங்களிடம் திரும்ப தந்தார்கள். இதில் கட்சிக்காரர்களில் சிலர் சுவிசேஷப் புத்தகத்தை வாங்கி சென்றார்கள். மொத்தம் 250 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 10:சகோதரர்கள் :- மனாசே, அந்தோணி, ஜெபமலைநாதன், பீட்டர் ராமலிங்கம்.**

**குப்பாண்ட பாளையம்** மற்றும் இதைச் சுற்றியுள்ள கிராமங்களுக்குச் சென்று வீடுகள்தோறும் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். 8 வருடமாக செய்வினை கோளாறினால் நடக்க முடியாமலும், பேச முடியாமலும் இருந்த வருக்காக ஜெபித்தபோது அவர் பேசினார். நடந்தார். **குன்னாங்கள்** என்ற கிராமத்தில் ஒரு வீட்டில் 5 பெண்கள் உட்கார்ந்திருந்தார்கள். இவர்களுக்கு யோவான் புத்தகம் கொடுத்தோம். இதில் ஒரு பெண் மட்டும் வேண்டாம் என்றாள். நாங்கள் வந்து விட்டோம். நாங்கள் சிறிது தூரம் வந்ததும் வேண்டாம் என்ற பெண் எங்களிடம் வந்து எங்கள் வீட்டு நாய்க்காக ஜெபம் செய்வீர்களா ? என்று கேட்டார்கள். சரி என்று சொல்லி போய் பார்க்கும்போது அந்த நாய் மரிக்கும் தருவாயில் இருந்தது. நாங்கள் ஜெபம் செய்தோம். நான்கு கால்களையும் வெட்டிக்கொண்டு, கத்திக்கொண்டு கிடந்த நாய் உடனே குணமானது. இதைப் பார்த்த அந்தப் பெண் புத்தகத்தை வாங்கிக்கொண்டு, அவர்களும் ஜெபித்துக் கொண்டார்கள். மொத்தம் 900 சுவிசேஷப் புத்தகங்கள் ,1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

***தேவனுக்கே மகிமை!***

**2011 மே மாத**
**இயேசுவை விரும்புவோர் முகாம்**

மாவட்டம் : புதுக்கோட்டை
தாலுகா : திருமயம்
நாள் : 14.05.2011
நேரம் : காலை 9 மணி

**கூடுமிடம்**

**பாஸ்டர் S. ஐசக்**
**இயேசுகிறிஸ்துவின் பேழை**
**5 / 31, ஆனந்தம் நகர்**
**( மரம் மில் அருகில் )**
**சந்தைப்பேட்டை,**
**திருமயம் போஸ்ட்,**
**புதுக்கோட்டை மாவட்டம்.**
**செல் : 97156 30551**
**99432 81640**

## 2011 மார்ச் மாத
## இயேசுவை விருமபுவோர் முகாம் அறிக்கை



**பாஸ்டர் எபிதாஸ்** & முகாமில் கலந்துகொண்டவர்கள்.

கர்த்தருடைய கிருபையினால் 26.03.2011 அன்று நாகை மாவட்டம் – தேரிழந்தூர் – நல்லமேய்ப்பன் சபையில் **இயேசுவை விரும்புவோர் முகாம்** நடைபெற்றது.

இரண்டு பேர் ஆர்வமுடன் வந்து கலந்து கொண்டார்கள். இவர்களுக்கு இயேசுவைப் பற்றிக் கூறியபோது, **இயேசுவே மெய்யான கடவுள்** என்பதை ஏற்றுக்கொண்டார்கள்.

தங்கள் குடும்ப பிரச்சனைகளுக்காக ஜெபிக்கக் கேட்டார்கள். ஜெபித்தபோது சந்தோஷப்பட்டார்கள்.

**பாஸ்டர் எபிதாஸ்** மதியஉணவு கொடுத்து உபசரித்து, இரண்டு பேருக்கும் புதியஏற்பாடு வழங்கினார்கள். இறுதியாக ஜெபித்து ஆசீர்வாதம் கூறி முடித்தார்கள். **தேவனுக்கே மகிமை!**

## கன்னியாகுமரி மாவட்ட
## TVGM அறிமுகப்பணி அலுவலகம்
## 2011 மார்ச் மாத ஊழிய அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் மார்ச் மாத ஊழியங்கள் ஆசீர்வாதமாக நடைபெற்றன.

புதிதாக ஒரு சகோதரியை கர்த்தர் ஊழியத்தில் இணைத்தார். தடைப்பட்டுக் கிடந்த இடங்களுக்கெல்லாம் தொடர்ச்சியாக சென்று ஊழியம் செய்ய கர்த்தர் கிருபை செய்து வருகிறார். சுவிசேஷ ஊழியமும் தடையில்லாமல் நடைபெற்று வருகிறது.

மார்ச் மாதத்தில் கன்வென்ஷன் மற்றும் வீட்டுக்கூட்டங்களிலும் தேவசெய்தியளித்து ஊழியம் செய்ய கர்த்தர் கிருபை செய்தார். புதிய தொடர்புகளையும் எதிர்பாராத நபர்கள் மூலமாக ஊழியத்தில் ஆசீர்வாதத்தையும் தந்தார். என்னுடைய சரீரத்திலும் கர்த்தருடைய அற்புத வல்லமையினால் நல்ல சுகத்தைப் பெற்று தடையின்றி ஊழியங்களை நிறைவேற்ற கர்த்தர் உதவி செய்தார்.

தொடர்ந்து புதிய அறிமுகப்பணிகளுக்காக முயற்சி செய்து வருகிறோம். கர்த்தர் வழிகளை திறக்க ஜெபித்துக்கொள்ளுங்கள். தேவனுக்கே மகிமை!

கிறிஸ்துவின் பணியில்,
**ஷோபனா இவான்சலின்.**

**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001

செல்: **98658 26424** போன் : **04652 - 277251**

# மோசேயின் தலைமைத்துவ குணங்கள்

நாம் மோசேயின் வாழ்க்கையை பார்க்கும்போது, அவரை வல்லமையான தலைவராக மாற்றின அவருடைய தலைமைத்துவ குணங்களை நாம் காணலாம். அந்த குணங்களின் சிலவற்றைப் பார்ப்போம்.

**மோசே – தன்னை ஜனங்களோடு அடையாளம் காட்டின மனிதர்**

மோசே தன்னை இஸ்ரவேல் ஜனங்களோடு அடையாளம் காட்டினார். அவர் இஸ்ரவேல் ஜனங்களோடு சேராமல், அரண்மனையிலே இருந்திருக்கலாம். ஆனால் அவர் அந்த ஜனங்களுக்காக பரிந்து பேச தேர்ந்தெடுத்தார். அவர் சொகுசு நிறைந்த வாழ்க்கையை வாழ்ந்திருக்கலாம். ஆனால் அவர் அப்படி செய்யவில்லை. அதற்கு மாறாக ஜனங்களோடு ஒன்றியிருந்து, துன்பங்களை அநுபவிக்கும் ஒரு தலைவராக காணப்பட்டார் ( எபி . 11 : 25 ).

இன்றைய காலங்களில் இப்படிப்பட்ட தலைவரை காண்பது மிகவும் அரிது.

**மோசே – தாழ்மையான மனிதர்**

மோசேக்கு பார்வோனின் அரண்மனையிலே எல்லா அதிகாரங்கள் இருப்பினும், அவர் இஸ்ரவேல் ஜனங்களோடு இருந்தார். இது அவருடைய தாழ்மையை பெரிதாக காட்டுகிறது. ஒரு மனிதனுக்கு அதிகாரம் இருக்கும்போது, அது அவனை முரடனாக மாற்றலாம். ஆனால் மோசே தேவசித்தத்தை அறிந்து, சுயநலத்தை மேற்கொண்டு அரண்மனையை விட்டு வெளியேறினார். ஒருவர் இப்படிப்பட்ட தாழ்மையை வெளிப்படுத்தினால் தான் நீண்ட காலம் பயனுள்ள தலைவராக இருக்க முடியும்.

இன்றைய காலங்களில் அநேகர் தாங்கள் எந்த நிலையிலிருந்து வந்தோம் என்று மறந்து விடுகிறார்கள். பணம், புகழ், அந்தஸ்து வந்தவுடன் மக்கள் தாங்கள் எப்படி முன்னேறினார்கள் என்பதை மறக்கின்றனர். ஆனால் மோசே அதற்கு மாறாக தாழ்மையை வெளிப்படுத்துகிறார். இதை எண்.12 : 3ல் வாசிக்கலாம். **“மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான். ”**

**மோசே – ஜனங்களுக்காக பரிதவிக்கும் மனிதர்**

மோசே இஸ்ரவேல் ஜனங்களின் பாடுகளை அறிந்தார். அவர்களுடைய துன்பத்தை தன் துன்பமாக பார்த்தார். இத்தகைய தலைமைத்துவத்தை இன்றைய காலங்களில் காண்பது மிகவும் அரிது. அநேக நேரங்களில் நாம் மற்றவர்களின் கஷ்டங்களைப் பற்றி கவலைப்படுவதில்லை. ஆனால் நமக்கு துன்பம் நேரிட்டால், அதைப் பற்றி கவலைப்பட்டு எப்படியாவது அதை சரிசெய்ய விரும்புகிறோம்.

உண்மையான தலைவன் தன் ஜனங்களுக்காக பரிதவிப்பான். ஆகவே உறுதியான தலைமைத்துவத்திற்கு, மற்றவர்களுக்காக பரிதவிக்கும் குணம் மிகவும் அவசியம். இந்த குணம் மோசேயினிடத்தில் பிரதானமாக காணப்பட்டது.

**மோசே – பொறுப்புள்ள மனிதர்**

இஸ்ரவேல் ஜனங்களுக்கு தலைவர் இல்லாததால், ஒரு பொறுப்புள்ள தலைமைத்துவம் வேண்டும் என்பதை மோசே உணர்ந்தார். ஆதலால் அவர்

தலைவராக இருக்க முன்வந்தார். மோசே அந்த காலக் கட்டத்தின் தேவையையும், அந்த பணியின் அவசியத்தையும் அறிந்து தான் தலைவராக இருக்க முன்வந்தார்.

மோசே பூரண மனிதனும் இல்லை, அவருக்கு அனுபவமும் இல்லை. அவர் மந்த நாவு உடை.யவராய் இருந்தார். ஆனால் அவர் ஜனங்களின் பிரச்சனையை அறிந்து, உடனே செயல்பட்டார். அவர் தன்னுடைய உயிரையும் பொருட்படுத்தாமல் பொறுப்புகளை ஏற்றார். ஆகவே தான் நம்முடைய தேவன், அவரை ஜனங்களை வழிநடத்தும்படி தேர்ந்தெடுத்தார்.

**மோசே – ஆழ்ந்து அறியுந்தன்மையுள்ள மனிதர்**

யாத். 3:3ல் "**அப்பொழுது மோசே: இந்த முட்செடி வெந்து போகாதிருக்கிறது என்ன, நான் கிட்டப் போய் இந்த அற்புதகாட்சியைப் பார்ப்பேன் என்றான்** " என்று அவர் சொன்னதின் மூலம் அவரது அறியும் தன்மையை அறியலாம். அல்லாமலும் மோசே தேவனிடம் அவருடைய மகிமையை காண்பிக்கும்படி கேட்டார். ஆகவே அவரது இந்த ஆழ்ந்து அறியுந்தன்மை இஸ்ரவேல் ஜனங்களை நடத்துவதில் பெலனாயிருந்தது. இந்த காலத்து தலைவரிடம் இப்படிப்பட்ட ஆழ்ந்து அறியுந்தன்மை காணப்பட்டால், தேவன் அவர்களுக்கு புதிய காரியங்களை வெளிப்படுத்தி மகத்தான உயர்வை தருவார்.

**மோசே – தேவனுக்கு பயந்த மனிதர்**

மோசே தேவனுக்கு பயந்தார். இதை யாத்.3:6ல் பார்க்கலாம். "**மோசே தேவனை நோக்கிப் பார்க்கப் பயந்ததினால், தன் முகத்தை மூடிக் கொண்டான்**". நாம் தேவனுக்கு எவ்வளவு அதிகமாய் பயப்படுகிறோமோ அவ்வளவு குறைவாய் மனிதனுக்கு பயப்படுவோம். ஒரு நல்ல தலைவன் தேவனுக்கு மட்டும் பயந்து, அவர் அவனுக்கு காண்பிக்கும் வழியில் தைரியமாய் முன்னேறி செல்வான்.

**மோசே – ஜனங்களுக்காக பரிந்து பேசும் மனிதர்**

மோசே பரிந்து பேசுபவராய் இருந்தார். இஸ்ரவேல் ஜனங்களின் சார்பாக அவர் தேவனிடம் மன்றாடுகிறார். மோசேயின் இந்தக் குணத்தை எண். 14 : 11–21ல் வாசிக்கலாம். மேலும் மோசே தன்னுடைய சுயபெலத்தை நம்பாமல் தேவனுடைய மகிமையை நாடினார். ஒரு தலைவர் தன் மக்களுக்காக பரிந்து பேசும்போது தான், அவர் நல்ல தலைவராக விளங்க முடியும்.

**மோசே – தேவனை விசுவாசித்த மனிதர்**

மோசே தேவன் மேல் விசுவாசம் வைத்தார். எபிரெயர் 11 : 27 ல் நாம் இப்படியாக வாசிக்கலாம். "**விசுவாசத்தினாலே, அவன் அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்து, ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தைவிட்டுப் போனான்**". மோசே விசுவாசத்தினாலே இஸ்ரவேல் ஜனங்களை பார்வோனின் பிடியிலிருந்து மீட்டார். தேவனின் விசுவாசமுள்ள தலைவன் மலைகளைக் கூட பெயர்க்க முடியும்.

ஆனால் இன்றைய காலங்களில் தலைவர்கள் தங்கள் கல்வி, பணம், அதிகாரத்தின் மீது தான் தன் விசுவாசத்தை வைக்கின்றார்கள். அது அவர்களுக்கு உயர்வை தராது. ஆகவே மோசேயிடம் இருந்த விசுவாசம் தலைவர்களிடத்தில் காணப்பட வேண்டும்.

**மோசே – தன்னலமற்ற மனிதர்**

மோசே ஒரு தன்னலமற்ற மனிதர். மோசேயின் இந்த குணத்தை நாம் வேதத்திலே பல முறை பார்க்கலாம். அவர் இஸ்ரவேல் ஜனங்கள் மீது கரிசனையுள்ளவராய் காணப்பட்டார். அவர் தன்னுடைய மகிமைக்காக எதையும் நாடவில்லை. அவர் இஸ்ரவேல் ஜனங்களுக்காக தம்மையே ஒப்புக் கொடுத்தார். ஒரு விதை செத்தால் ஒழிய அது கனிகள் தராது. ஆகவே இன்றைய உலகத்தின் தலைவர் தன் ஜனங்களுக்காக முழுமையாக ஒப்புக்கொடுத்து, தேவனுடைய ராஜ்யத்தை விரிவாக்க வேண்டும்.

**மோசே – தேவனுக்கு செவிக்கொடுத்த மனிதர்**

மோசே தேவனுக்கு செவிக்கொடுத்தார். அவர் தேவனின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றினார். இன்றைய காலத்தில் கிறிஸ்தவ தலைவர்களுக்கு செவிக் கொடுக்கும் பண்பு மிக முக்கியமான ஒன்றாகும். தேவனுடைய சத்தத்திற்கு செவிக் கொடுக்கும்போது, பல கனி தரும் திட்டங்களை ஊழியத்தில் செயல்படுத்தலாம்.

மோசேயின் வாழ்க்கையை நாம் படிக்கும்போது, அநேக தலைமைத்துவ குணங்களை கற்றுக் கொள்ளலாம். மோசேயின் பின்னனி மற்றும் வளர்ந்த சூழ்நிலைகளைப் பார்த்தால், மோசேயின் தலைமைத்துவம் தனிச்சிறப்பு வாய்ந்ததாக உள்ளது. அதே போன்று தேவன் உங்கள் வாழ்க்கையில் சிறப்பான திட்டத்தை வைத்திருக்கிறார். **தேவனுக்கே மகிமை !**

***. . . . Bro. Stephen Christopher***

## TVGM குறுகிய கால
## இலவச சீஷத்துவ வேதாகம பயிற்சி
### *2011 ஏப்ரல் 25 - மே 31 முடிய*

சபை போதகருக்கு உதவியாக இருப்பதற்காக புது விசுவாசி களுக்கும், TVGM மூலம் வேதபாடங்கள் தபால் மூலம் படிப்பவர்களுக்கும் ஆவிக்குரிய பயிற்சி அளிக்கிறோம். உணவு , உறைவிடம், படிப்பு இலவசம்.

ஏப்ரல் 30க்குள் தொலைபேசி 0431 - 2607241 மூலம் தொடர்பு கொண்டு அனுமதி பெற்றுக் கொண்டு சபை போதகர் சிபாரிசு கடிதம் மற்றும் விண்ணப்பப்படிவ கட்டணம் ரூ. 10/–உடன் வந்து சேரவும்.

இப்பயிற்சியில் இரட்சிப்பு , ஞானஸ்நானம், அபிஷேகம் , தனிஜெபம், வேதத்தை தியானம் செய்தல், ஓய்வுநாள் பாடசாலை நடத்துதல் , வீட்டு ஜெபக்குழு நடத்துதல் போன்ற காரியங்களுக்கு ஆவிக்குரிய போதகர்கள் மூலம் பயிற்சி வழங்கப்படும்.

குறைந்த பட்சம் 30 நாட்கள் பயிற்சி பெறுபவர்களுக்கு மட்டும் சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பு : **வயது, படிப்பு கவனிக்கப்படுவதில்லை. சபை பாகுபாடின்றி அனைத்து சபை போதகர்களும் தங்கள் சபையிலுள்ள ஆண், பெண் இருபாலரையும் சிபாரிசு கடிதத்துடன் முன்அனுமதி பெற்று அனுப்பி வைக்கவும்.**

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.**

**"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது". யாக். 5:16**

# தினசரி ஜெபக்குறிப்புகள்

**திங்கள்:** தேவனுடைய கிருபையினால் TVGM ஸ்தாபனத்தை **சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்** பொறுப்பெடுத்து மே 1 ம் தேதியுடன் 7 ஆண்டுகள் முடிவடைகிறது. தேவாதி தேவனைத் துதியுங்கள்.

இதனுடைய ஸ்தோத்திர ஆராதனையை 2011 மே 6 வெள்ளி மாலை 5 மணி முதல் 8 மணி வரை கொண்டாட இருக்கிறோம். ஜெபியுங்கள். துதியுங்கள்.

**செவ்வாய்:** TVGM சீஷத்துவப் பயிற்சி ஏப்ரல் 25 முதல் மே 31 முடிய நடத்த திட்டமிட்டிருந்தோம். கர்த்தர் கிருபையாக மாணவ, மாணவிகளை கொண்டு வரவும், நல்ல போதகங்கள் கொடுக்கப்படவும் ஜெபியுங்கள்.

**புதன் :** TVGM அறிமுகப்பணிக்கு ஒரு ஆம்னி வேன் ரூ. 3 லட்சத்தில் வாங்க கர்த்தர் உதவிச் செய்தார். இதனுடைய மாதாந்திர தவணையை ஒழுங்காக செலுத்த கர்த்தர் கிருபையாக பொருளாதார வாசலை திறக்க ஜெபியுங்கள்.

மேலும் நம்முடைய TVGM சிறுவர் இல்லத்தினுடைய குளியலறை, கழிவறை கட்டிடப் பணிகள் துரிதமாக முடிவடைய ஜெபியுங்கள்.

**வியாழன் :** 2010 - 2011 TVGM & TASOL வருடாந்திர கணக்குகள் ஜூன் மாத இறுதிக்குள் தணிக்கை செய்யப்பட்டு சகல அரசாங்க அலுவலகங்களுக்கும் சமர்பிக்கப்பட ஜெபியுங்கள்.

**வெள்ளி :** TVGM தலைமை அலுவலகத்திற்கு அவசியமாக தேவைப்படும் Tally Accounts செய்து முன் அனுபவம் உள்ள ஒரு நபரும் மற்றும் தமிழ், ஆங்கிலம் கம்ப்யூட்டரில் டைப் செய்ய தெரிந்த ஒரு நபரும், சிறுவர் இல்லத்தைக் கவனிக்க தரிசனம் பெற்ற உதவியாளர்களும் கர்த்தர் கிருபையாக கொடுக்கும்படி ஜெபியுங்கள்.

**சனி :** TVGM ஸ்தாபகரை உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் தேவன் வல்லமையாக பயன்படுத் தவும், புதிய வாசல் திறக்கவும் ஜெபியுங்கள்.

**ஞாயிறு :** 2011 மார்ச் மாதத்தில் **சிங்கப்பூரில்** ஆரம்பித்து வைத்துள்ள **ஏலீம் ரிவைவல் காஸ்பல் டீம்**–ஐ கர்த்தர் ஆசீர்வதிக்கும்படியாகவும், **லிட்டில் இந்தியா**வில் செய்த **ஜெபநடை** மூலம் கர்த்தர் பின்வரும் நாட்களில் மகிமையான காரியங்களை கிருபையாக செய்ய ஜெபியுங்கள்.

**TVGM தலைமை அலுவலக முகவரி**
**BRO.STEPHEN CHRISTOPHER C.E.O.**
**TAMIL VILLAGE GOSPEL MISSION**
**1OO-VILLAGE,**
**Veeranginallur Road,**
**SOMARASAMPETTAI ( Hospital Stop)**
**TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.**
**Ph: 0- 431 - 2607241 Cell : 94449 80445 Email : 100village@tvgm.org**
**Founder : Bro . P.T. Christopher - Cell : 94435 44628**

**கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு**
**டிராப்ட் , செக், போஸ்டல் ஆர்டர், M.O அனுப்ப வேண்டிய முறை**

1.TAMIL VILLAGE GOSPEL MISSION (100- கிராம ஊழியம், ஜெபவீடு)
2. T.V.G.M. PUBLICATION ( பத்திரிக்கை சந்தா, அச்சகம் அமைக்க)

பின்ரும் 2 Trust களுக்கு மட்டும் 80G வரி விலக்கு உண்டு.

1. T.V.G.M. SOCIAL SERVICE சிறுவர் இல்லம், ஏழை, எளியவர்கள் உதவி
2. TASOL(நிலம் வாங்குவதற்கும் மற்றும் கல்வி நிதி

குறிப்பு :Bank Account நம்பர் தேவைப்பட்டால் தயவுசெய்து உங்கள் நோக்கத்தை குறிப்பிட்டு எங்களுக்கு ஈமெயில் / தபால் எழுதவும்.

**குறிப்பு :Bank To Bank அனுப்பும்போது உங்கள் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண், காணிக்கை அனுப்புவதின் நோக்கம் யாவையும் TVGM தலைமை அலுவலக முகவரிக்கு தபால் அல்லது எங்கள் Email: 100village@tvgm.org மூலம் தெரியப்படுத்தி உதவுங்கள்.**

## Website : www.tvgm.org

தினசரி வாக்குத்தத்தம், மாதாந்திர வாக்குத்தத்த செய்தி
,**'100 கிராம ஊழியம்'** அனுபவ சாட்சிகள்,
TVGM Documentary, TVGM சிலுவைக்கொடி பாடல்கள்,
மற்றும் முக்கிய நிகழ்ச்சிகள் வெளியிடப்பட்டு வருகிறது.
**தவறாமல் பாருங்கள் ! ஜெபியுங்கள் !**

Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011
HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
POSTAL REGISTRATION NUMBER :TRY / 013 / 2009 - 2011
Posting Date 25th at H.P.O. Trichy.



## ஒரே வழி இயேசு

கும்பகோணம் சபை போதகர்
**டாக்டர் ஜேக்கப் மனோகரன்**
குடும்பம் மற்றும்
**"இயேசுவின் சமாதானம்"**
பத்திரிகை ஆசிரியர்
**சகோ. ராபி** அவர்களுடன்
சகோ. P.T.கிறிஸ்டோபர்.





சிங்கப்பூரில் பணிபுரியும் சகோ. **சார்லஸ் பாஸ்கர்** & **சகோ.ஜான்** ஆகிய இரு புதிய தம்பதிகளுக்கு P.T. கிறிஸ்டோபர் விசேஷ ஜெபம் செய்தார்கள்.

**To**

**Return Requested:** TVGM ,
100 - Village,
Somarasampettai, Trichy - 620 102. India.